1134

பதிவு எண் — M 5720 | உ வெள்ளிக் கிழமையில் | குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு.- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: தை, உக 3–2–56 தளிர்–15

OFFICE OF THE REGISTRAR ... MADRAS

1134
1-56

திருக்குறள் பிழிவு:

## மன நலமும் இன நலமும்

மனம் உடையவன் மனிதன் என்பர்; மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்றால், மனநலம் உடையவனாக வாழ வேண்டும் என்பது, கருத்தாகிறது.

மனநலம் என்பது கற்றலால் உண்டாகும் தெளிந்த உணர்வே அல்லாமல் வேறில்லை; அந்நிலையில் அந்த உணர்வு பண்பட்டதாயிருக்கும். ‘எல்லாரியல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்’ என்றார் அந்தப் பண்புடைமையைப் பரிமேலழகர். “பண்பெனப்படுவது பாடறிந்தொழுகுதல்” என்று கலித்தொகையிலும் வந்தது.

ஆனால் திருவள்ளுவர், மனிதன் இங்ஙனம் மனநலம் உடையவனாக மட்டும் இருந்தால் போதாது, அந்த மன நலம் குறையாமலிருப்பதற்குக் கூட இன நலம் வேறு பெற்றிருக்க வேண்டும் என்று கருதுகிறார்.

அந்த இன நலம், மன நலத்துக்கு மேற்பட்ட நலம் உடையதாக இருந்தால்மட்டுந்தான், மன நலம் மட்டும் உடைய மனிதர்க்குப் பாதுகாப்பாகும் என்பது தெளிவு.

ஆகவே, கற்று மனநலம் பெற்றதனால் மட்டும் பயனில்லை; வாலறிவன் நற்றாள் துணை பெறுதலும் வேண்டும்; கற்றலோடு இம் மெய்ப்பொருள் காண்டலும் வேண்டும் என்பது வள்ளுவர் கருத்தாய் உள்ளது.

மன நலம் நன்குடையராயினும் இந்த இன நலமும் தேவை; இந் நலமும் உடையாரைத் தெய்வத் தன்மை உடையார் என்பர். ஆதலால், மனிதன் மனிதனாக வாழ்ந்தால்மட்டும் போதாது; மனிதன் தெய்வ குணம் உடையவனாகவும் விளங்க வேண்டும்என்பதுமுன்னோர் முடிபு.

"முல்லைக் கொடி"
(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | |
|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 0 0 |
| வெளி நாடு | ரூ. | 6 0 0 |
| தனித் தாள் | ரூ. | 0 1 0 |
| ஆயுள்— | | |
| கையொப்பம் | ரூ. | 100 0 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"
—புறநானூறு.

| கிளை 8 | மன்மத, 3-2-56 | தளிர் 15 |
|---|---|---|

# அன்னை ஜெயலக்ஷ்மி

**திருஅரசிலி:**

தொண்ட நாட்டில் திரு அரசிலி, ஒரு தலம்! பாடல் பெற்ற சிவபெருமான் திருக் கோயில்களில் அது ஒன்று: தொண்ட நாட்டின் தென்கோடியில் உள்ளது.

ஞான உணர்ச்சிக்கு மிகவும் உதவுவதாகிய காற்றும் நிழலும் உடைய அரசமரத்தின் அடியைத் தனக்குஇருப்பிடமாகச்சிவ பெருமான் கொண்ட இடமாதலால், அப் பெருமானுக்கே 'அரசிலி' என்பது பெயர்; அந்த ஊருக்கும் அதுவே பெயராயிற்று.

அரசிலிக்குச்செல்வோர், அங்கே தங்கி மெய்யன்புடன் இறைவனைத் தொழுது ஈடுபட்டு உருகினால், சிறந்தமெய்ஞ்ஞானத் தெளிவினை அவர் பெறுவர். அரசமரம் அந்தத் தலத்தின் தெய்வமரம்.

**குருகுலத்தார்:**

ஐந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள்: நல்ல வேனிற் காலம்.

தொண்ட நாட்டுத் தலங்கள் முப்பத்திரண்டும் வழிபாடு செய்யும் நோக்கத்துடன், குருகுலத்தார், திருவெற்றியூரில் தொடங்கி எல்லாத் தலங்களையுங் கண்டு வணங்கிக் கொண்டு, கடைசியில் முப்பத்திரண்டாவது தலமாகத் திரு அரசிலிக்குச் சென்றனர்.

நல்லவெய்யில்நேரம்.பகல் ஒரு மணிக்கு மேல் இருக்கும்.அரசிலியப்பன்இப்படி வேவா வெயிலில், ஆடவரும், மாதருமாகத் திகைத்துச் சென்ற குருகுலத்தாரை அந்த ஞானத் திருப்பதிக்கு அழைத்து விட்டான்.

குருகுலத்தார் பசியாலும் நீர் வேட்கையாலும் வெயிலாலும் சரியாக வழி அறியாத அலைவாலும் களைத்துப்போயிருந்தனர். அரசங் காற்றும் நிழலும் அரசிலியப்பன் அருளும் அந்நேரத்தில் மிக்க உதவியாய்த் தண்மை பயந்தன.

**வரவேற்பு:**

என்ன வியப்பு! குருகுலத்தார் இருபத்தைவர் அப்போது இருந்தனர். அத்தனை பேர்க்கும் அறுசுவை யுணவும், இளைப்பாறும் இல்லமும் கொண்டு அங்கே அன்பர்கள் வழி எதிர்பார்த்து ஆயத்தமாய் இருந்தனர் என்று உடனே தெரிந்தது. அருகே இரண்டு கல் தொலைவில் திகழ்வது காட்டரண்பாக்கம் என்னும் ஊர்; அவ்வூர்த்திருவாளர் வரதா ரெட்டியார் அவர்கள், அரசிலியில் இவ்வேற்பாடுகளைச் செய்து வைத்துக் கொண்டு குருகுலத்தார் வழிமேல் விழிவைத்திருந்தார். மயிலம் மகாசந்நிதானம் அவர்கள் வழியாகக், குருகுலத்தார் வரவை முன் அறிந்து, எல்லாம் அன்புடன் அமைத்திருந்தனர்.

**ஞான நிழல்:**

குழந்தை யுள்ளமும், கடமை யுணர்வும், மெய்யன்பு மாட்சியும், உலகியல் திருவும் ஒருங்கே வாய்ந்தவர் திரு ரெட்டியார் அவர்கள். அக்கம் பக்கத்திலுள்ள அன்பர்களும் சேர்ந்து, ஐம்பது பேர்க்குமேல் நல் உணவு உண்டு அனைவரும் ஞான நிழலில் ஆறுதல் அடைந்திருந்தனர்.

மாலை நான்கு மணிக்கு மேல் திருக்கோயிலில் அரசிலி ஆண்டவர் வழிபாடு குருகுலத்தார்க்கு அமைதியாய் நிகழ்ந்தது. அடுத்து ஆசிரியரின் விரிவுரைத் தொண்டும் இறைவன் திருமுன் மண்டபத்தில் நிகழ வேண்டும்.

குருகுலத்தார் வழிபாட்டில் அரசிலி தொண்ட நாட்டின்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கும் மாமருந்து— முந்திய
நன்னெறி நாம்அறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

—கவுணியனார்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்திங்கள்
பொள்ளென நீக்கும் புறவிருளைத்— தெள்ளிய
வள்ளுவர் இன்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

—மதுரைப் பாலாசிரியனார்

வள்ளுவர் பாட்டின் வளம்உரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவ ருலகடைய வுண்ணுமால்
வண்டமிழின் முப்பால் மகிழ்ந்து.

—ஆலங்குடி வங்கனார்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

—இடைக்காடர்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

—ஔவையார்

---



அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்— குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநேர் ஒவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

—கோவூர்கிழார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமுப் பால்பகரார்— நாவிற்
குயலில்லை சொற்சுவை யோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

—உறையூர் முதுகூற்றனார்

இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்கும்
செம்மை நெறியின் தெளிவுபெற— மும்மையின்
வீடவற்றின் நான்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடினர் இன்குறள்வெண் பா.

—இழிகட் பெருங்கண்ணனார்

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லார் எடுத்தியம்பத்— தேவர்
திருவள் ளுவர்தாமும் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

—செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழால் உரைசெய்தா—ராதலால்

உள்ளுநர் உள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

—செயலூர்க் கொடுஞ் செங்கண்ணனார்

ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்— ஆரியம்
வேதம் உடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா உடைத்து.

—வண்ணக்கஞ் சாத்தனார்

ஒருவர் இருகுறளே முப்பாலின் ஓதும்
தரும முதல்நான்கும் சாலும்— அருமறைகள்
ஐந்தும் சமயநூல் ஆறும்நம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

—களத்தூர் கிழார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவர் இன்குறள்வெண் பா.

—நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினும்— தொலைவிலா



வான்ஊர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பால்நூல் நயத்தின் பயன்.

—அக்காரக்கனி நச்சுமனார்

அறம்தகளி ஆன்ற பொருள்திரி இன்பு
சிறந்தநெய் செஞ்சொல்தீத் தண்டு— குறும்பாவா
வள்ளுவனார் ஏற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

—நப்பாலத்தனார்

உள்ளக் கமலம் மலர்த்தி உளத்துள்ள
தள்ளற் கரியஇருள் தள்ளுதலால்— வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகும்குணத்தைக் கொண்டு.

—குலபதி நாயனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே— முப்பாலின்
தெய்வத் திருவள் ளுவர்செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

—தேனீர்குடிக் கீரனார்

அறன்அறிந்தேம் ஆன்ற பொருள்அறிந்தேம் இன்பின்
திறன்அறிந்தேம் வீடு தெளிந்தேம்— மறனெறிந்த
வாளார் நெடுமாற! வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாங் கேட்டு.

—கொடிஞாழன் மாணிபூதனார்

லிய நான்கினுள் அடங்கிவிடும்; ஆனால் எவையெவை எப்படி எவ்வெவற்றுள் அடங்கும் என்பதாவது, எவ்வெவற்றிலிருந்து எவையெவை எப்படி விரிந்து விளங்கும் என்பதாவது எளிதில் தெரிவதில்லை.

வேதத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நாற் பொருளுங் கூட விளக்கமாய்க் கூறப்படா. வேதம் என்பது, மிக நுண்ணிய பேருணர்வினரான தவத் திருவினர்க்கு மிகவுங் குறிப்பாகத் திருவருளே குருவாகத் தோன்றி உணர்த்தும் சில ஒலிக்குறிப்புகளேயாம்; அவை, அறம் முதலிய நாற்பொருளும், அவற்றிலும், மிகச் சிறப்பாக வீடும், நுணுக்கமாக உட்கொண்டவை. மேலும், அவ்வொலிக் குறியீடுகள், உலகோர் வழங்கும் எம்மொழியிலும் அடங்கியவை அல்ல.

ஆதலால், அருள் கைவந்த பெரியோர் சிலர், அவ் வேத வொலிகளின் நுண்பொருள்களைத், தாம் தாம் வழங்கும் உலக மொழிகளில், தம்மால் இயன்றபடி விளக்கி மொழிந்தனர். அப்படி வந்த மறை நூல்கள் உலகிற் பல. ஆரிய இனத்தார்க்கும் தமிழ் இனத்தார்க்கும் மறைகள் உண்டு. ஆனால், இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் திருவள்ளுவர் தோன்றி இயற்றியுதவிய 'திருக்குறள்' என்னும் பொதுமறை, எல்லாவற்றையும் விஞ்சிவிட்டது! எல்லார்க்கும் உரிய பொதுமறையாகவும் திகழ்கின்றது; காரணம், வேதப் பொருளை அவர் விரித்தோதிய திறம் அப்படி!



இரண்டே கருத்துக்கள் வள்ளுவர்க்கு; ஒன்று, மக்கள் இம்மை மறுமை உண்மைகளைச் செவ்வையாய்த் தெளிந்து வாழ்க்கை நடத்தவேண்டும் என்பது; மற்றொன்று, அதற்கு வழிகாட்டியான விதி நூலாக, அதாவது வாழ்க்கை வேதமாக, பொதுவும் சிறப்புமான முறையில் முப்பாலின் நான்மறையாக ஒரு தகுதியான நூல் விளக்கு வேண்டும் என்பது.

இந் நோக்கங்களுடன் திருவள்ளுவர் குறள் வெண்பா பாடினர்; திருக்குறள் அவர் நோக்கங்களை இனிது நிறைவேற்றி மன்பதைப் பணி இயற்றிவருகின்றது!

—இழிகட் பெருங் கண்ணனார்

திருக்குறள், மக்களுக்குச் சிறந்த விதி நூல்! வாழ்க்கைக்கு ஆவன இவை ஆகாதன இவை என்பதை அது உலகுக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. அறிவுடையோர் யாவரும் எவரும் இதிலிருந்து விதிகளை எடுத்துச் சொல்ல முடியும்; ஒழுக்கமுடையார், அப்படியே நடக்கவும் முடியும். இங்ஙனம் நடைமுறைக்கு ஒத்தது குறள்மறை!

திருக்குறளை வைத்துக் கொண்டு, அறிஞர் பலர் உலகமெங்கும் உலவி, அறிவுரை கூறி உண்மைகளைப் பரவச் செய்யலாம். ஒழுக்க சிலர் நடை முறையில் நடந்து தாமும் மேம்படலாம், பிறரையும் மேம்படச் செய்யலாம். இவற்றிற்கு ஏற்ற நூல் இது!

நன்மக்களிற் பெரும்பாலோர் அறிவு நிலையில்

இன்புறுவோர்; சிலர் ஒழுக்க நடையில் மேம்படுவோர். அறிவுச் சிறப்புடைய கலைஞர், வாழ்க்கையில் பொது நிலைக் குரியோர்; அறிவோடு ஒழுக்க நடையும் மிக்க தெய்வப் பண்பினர், சிறப்பு நிலைக் குரியோர். இருதிறத்தாரும் ஏனைப் பொது மக்களுக்கு அவரவர் வல்லமைப்படி தொண்டாற்றலாம், தொண்டுக்குக் குறள்மறை உள்ளது. அறிவுடையோர் திருக்குறள் விதிகளை எடுத்தெடுத்துச் சொல்லலாம்; சொல்லச் சொல்ல வாய் ஊறும். ஒழுக்கமுடையோர் திருவள்ளுவர் சொற்படியே நாளும் ஒழுகலாம்; ஒழுக ஒழுக உள்ளம் உயரும்.

அறிஞர், பல வகையோராய் இருப்பது இயல்பு; பல்வகைக் கலைஞரா யிருப்பதும் இயல்பே; பொது அறிவு சிறப்பறிவுகள் உடையோராய் இருப்பதும் உண்டு: பயிற்சியறிவும் இயற்கையறிவும். சிற்றறிவும் பேரறிவும் நுண்ணறிவும் திண்ணறிவும் அமைந்தோரும் இருப்பர்; ஆயினும் எத்திறத்தவர்க்கும் திருக்குறளில் அறிவு விருந்து கிடைக்கும்.

அறிவுடையோர், அவர் எவ்வகையைச் சேர்ந்தவராயினும், எதை எடுத்தாலும் எந்நிலையிலும் ஆராய்ச்சியுடையவராகவே இருப்பர்; வேத விதியேயாயினும் அவற்றில் தலைமை மேவிய திருக்குறள் விதிகளேயாயினும் ஆய்ந்து ஆய்ந்து காண்பதே அவர் இயல்பு! அத்தகையோர்க்கு ஆராய்ச்சி வெள்ளமாய் ஊற்றுப் பெருக்கெடுக்கும் திருக்குறள்!



அவரனையர் நாளும் எவ்வளவும் ஆராய்ந்து கொள்ளட்டும்; நாவன்மையால் பொழிந்து தள்ளட்டும்; கை சென்றபடி எழுதிக் குவிக்கட்டும். எப்படியோ உலகுக்கு எவ்வகையாகவேனும் பரப்புரைத் தொண்டுகள் நடக்கட்டும். பரப்புரைகளும் ஓரளவு வேண்டியவே யாதலின், திருக்குறட் பயிற்சி, அதற்கேற்ற வல்லமையை அவர்க்கு உண்டாக்கும்.

இனி அவரெல்லாரையும்விட, ஒழுக்க நடையில் கருத்துடையோர் உயர்ந்தவர்; ஒப்பற்ற ஒழுக்கத்தால் அவர் ஒப்பற்றவராவர். அத்தகையோர் திருவள்ளுவர் சொன்ன ஒழுக்க விதிகளை அப்படியே நடந்து காட்டுவர்; ஆராய்வதில் அவர்கள் கருத்துச் செல்லாது; திருவள்ளுவர் சொல்லுக்கு இரண்டாவது இல்லை. குறள் வேத விதிப்படி பணிந்து பண்பட்டுப் பணி செய்துகிடப்பதே அவர் செயல்!

குறள்மறை இவ்வாறு உயர்ந்த விதிநூலாய், உலகத்தை, அறிஞரை, பண்பாளரை நாளும் தன்னிகரின்றி இயக்கி வருகின்றது!

—செயிர்க்காவிரியார் மகனார் சாத்தனார்

அறம் பொருள் இன்பம் வீடு என்னுங் கருத்துக்கள் 'வேதப் பொருள்' எனப்படும். வாழ்க்கைக்கு இவை தவிர வேறு உறுதிப் பொருள்கள் இல்லை.

சிந்திக்கும் வல்லமையுடையவர் மாந்தர்; அவர் என்னென்னவெல்லாம் சிந்தனையாற் கருதுதல் கூடுமோ அவையனைத்தையும் மேற்கூறிய அறம் முத

கடைசி தலமாதலின், வழிபாடு முடிந்ததும் நிகழ்ச்சிக் குறிப்புப் படி அவரவரும் தம் இருப்பிடம் செல்லத் துணிந்திருந்தனர். அப்போது, அங்கிருந்த அன்பர்கள், இரவும் தங்கிச் செல்லலாம் என்று விரும்பினர்; திரு ரெட்டியார் அவர்களும் வேண்டினர், காட்டரண்பாக்கத்திலிருந்து திரு ரெட்டியார் அவர்கள் வாழ்க்கைத் துணைவியார், குருகுலத்தார், தம் இல்லத்துக்கு வருகை புரிய வேண்டும் என்று தக்கவர்கள் வழி செய்தி அனுப்பி அழைத்தார்கள்,

**அருள் நேயச் செல்வியார்:**

எல்லாரும் அம்மையாரின் சிவநேயம், சிவனடியார் நேயம் முதலியவற்றைப் பல வழியாக எடுத்துப் பாராட்டிச் சொல்லி, இரவு காட்டரண்பாக்கத்துக்குச் சென்று தங்கிச் செல்வது மிகவும் நலமாக இருக்கும் என்று வற்புறுத்தினர். அறுபான் மும்மை நாயன்மாரைப் போல் அம்மையார் இக்காலத்தில் மிக்க பத்திச் செல்வம் பூண்டு திகழ்கின்றார்கள் என்றும், அவர்கள் இல்லம் மெய்யடியார்க்கு 'அடையாத வாயில் அகம்' என்றும், அவர்கள் வேண்டுகோளை நிறைவேற்றுதல் நலம் என்றும் எல்லாரும் அறிவித்தனர். ஆசிரியர் அப்படி ஓர் அம்மையார் இக்காலத்தில் திகழும் அருமையை நினைத்து மகிழ்ந்தன ராயினும், நிகழ்ச்சிக் குறிப்பின் படி நடப்பதிலேயே கருத்துடையவராய் இருந்தார்,

வழிபாடு நிகழ்ந்துகொண்டிருக்கும்நேரம். காட்டரண்பாக்கத்திலிருந்து மேலும் மேலும் அழைப்பு வந்தபடி இருந்தது. ஆசிரியர்சென்னை திரும்புவதே கருத்தாய் இருந்தார்.

விரிவுரை முடியும் தருவாய். அந்நேரத்தில் உருக்கமும், அமைதியும் உடையவராய் ஓர் அம்மையார் மெதுவாகவும் அடக்கமாகவும் விரிவுரை மண்டபத்தில் நுழைந்து ஆசிரியரையும் திருக்கூட்டத்தாரையும் வணங்கிக்கொண்டு ஒதுக்கமாய் ஓர் இடத்தில் அமர்ந்தனர். ஞானத்திருப்பதியாகிய அரசிலியாதலின் அப்போது ஆசிரியர் சிவநாமமாகிய திருவைந்தெழுத்தின் விளக்கம் அறிவுறுத்துக்கொண்டிருந்தனர். அம்மையார் செவி வாயாகப் பருகினர்.

விரிவுரை முடிந்ததும், அம்மையார் பணிவுடன் எழுந்து வந்து மீண்டும் ஆசிரியரை வணங்கிக்கொண்டார். 'தேநீர் இருக்கிறது, அடியார்களுடன் பருக வேண்டும்' என்று கேட்டுக்கொண்டார்.

அருகில் இருந்தவர்கள், 'திருவரதா ரெட்டியார் அவர்கள் துணைவியார் சிவபத்திச் செல்வமிக்க அம்மையார் இவர்தாம்' என்று தெரிவித்தார்கள்.

நல்ல பெட்டி வண்டிகள் சிலவும் எல்லார்க்கும் தேநீர் நிரம்பிய அண்டாக்களும் கொண்டுவந்திருந்தார்கள்; இயன்றால், வண்டிகளில் அழைத்துக் கொண்டு போக வேண்டும் என்னும் ஆராமையோடும் உறுதியோடும் இரண்டு கல் தொலைவு அம்மையார் வந்து உருக்கமும் ஏக்கமும் கொண்டு நின்ற காட்சி, எல்லார்க்கும் உள்ளம் ஈர்த்துப் பெருங் கனிவு தந்தது.

பேரன்புடன் அம்மையார் தேநீர் வழங்க, அனைவரும் பருகி மகிழ்ந்தனர். 'காட்டரண்பாக்கம் அருகேதான் உள்ளது; வண்டிகள் வந்திருக்கின்றன; அரசிலிக்கு வந்து, குருகுலத்தார் இல்லம் வராமல் திரும்பிப் போவது எங்களுக்குப் பாக்கியக் குறைவாய் இருக்கிறது. தொண்ட நாட்டின் தலவழிபாட்டு முடிவில் இங்கே வந்தது எவ்வளவோ நற்பேறு; அப்படியே, இல்லம் வந்து தங்க உள்ளம் பற்ற வேண்டும்; அதனால் எல்லாரும் பெரும் பேறு பெற்றவர்களாவோம்; அருள் கூர்ந்து எழுந்தருள வேண்டும்' என்று அம்மையார் பெரிதும் இறைஞ்சினர். அம்மையார் ஆர்வத்தை நிறைவேற்ற வேண்டுமென்று அருகிலிருந்தோர் அனைவரும் மீண்டும் கேட்டுக் கொண்டனர். திரு ரெட்டியார் அவர்களும்உள்ளம் ஒன்றி வேண்டினர்.

ஆசிரியர்க்கு இதற்குமேலும் வேறு கருதக் கூட வில்லை. அரசிலியில், திருக்கோயிலில், சந்நிதானத்தில், விரிவுரைநேரத்தில், திருவைந்தெழுத்தின் அறிவுரையில், அம்மையார் உருக்கமே வடிவமாக முதன் முதலில் சந்திக்க நேர்ந்ததும், அம்மையாரின் பக்குவ முதிர்ச்சி, சிவத்தொண்டு அடியார்த் தொண்டுகளின் தீவிரம், நன்மையில் உறுதிப்பாடு முதலியனவும் ஆசிரியர்உள்ளத்தைஈர்த்தது. பகலில் அனைவர்க்கும் பசி ஆற்றுவித்து மாலையிலும் தேநீர் வழங்கி ஆறுதல் அளித்து, அரசிலி வழிபாடும் விரிவுரைத் தொண்டும் இனிது நிகழ்தற்குரிய ஏற்பாடுகள் செய்வித்து மகிழ்ந்த அருஞ்செயல் பற்றி ஒரு நன்றிக் குறிப்பும் ஆசிரியர் உள்ளத்தில் அரும்பிற்று. உடன் இருந்த குருகுலத்தார்க்கும், அம்மையார் வேண்டுகோளுக்கு அமைதி செய்ய வேண்டும் என்று ஆர்வம் தோன்றினமை புலப்பட்டது.

ஆசிரியர், காட்டரண்பாக்கம் எழுந்தருள உள்ளம் பற்றினார். ஆர்வமும் விரைவும் பெருக வண்டிகள் புறப்பட்டன.

காட்டரண்பாக்கத்தில் சிறந்த வரவேற்பு நிகழ்ந்தது.

அன்று இரவு அம்மையார் இல்லத்தில் மீண்டும் அனைவர்க்கும் நல்லுணவு வழங்கப்பெற்றது. ஊரார் பலர் ஒருங்கு கூடினர். அயலூர்களிலிருந்தும் அன்பர்கள் வந்திருந்தனர். ஆசிரியரின் ஆழ்ந்தமைந்த தெளிந்த விரிவுரை ஒன்று அங்கும் நடந்தது.

திரு. ரெட்டியார் அவர்களும் அம்மையார் அவர்களும் அங்குப் புலப்படுத்திய ஆர்வமும் மெய்யன்பும் ஒரு போதும் குருகுலத்தார் உள்ளத்தை விட்டு அகலா; அன்றே அம்மையார் குருகுலத்தார் ஆயினார்; குருகுலத்தின் அன்னையும் ஆயினார்.

அன்னைக்குரிய கனிவும் பொறுப்பும் அம்மையாரைக் கவ்விக் கொண்டன; மறுநாள் காலையும் அனைவர்க்கும் இனிய சிற்றுண்டி வழங்கி, ஆசிரியர்க்கு ஒரு காணிக்கையும் தந்து, நல்லார் பலருடன் அரைகல் தொலைவு ஊர்தி வரையில் வந்து பிரியமாட்டாத பேருள்ளத்துடன் வழி விட்டனர்.

எல்லாம் வல்ல இறைவன் உரிய காலங்களில் கருணைப் பெருக்குடன்பொறுப்பாகஅவரவர்க்கும் அருளுதவி செய்து வருதலை அறிய அறிய, யார்க்கும் உள்ளம் மெழுகென உருகும், தொண்ட நாட்டுத் தல வழிபாட்டின் முடிவில் அரசிலியில் அம்மை ஜெயலக்ஷ்மியாரின் சந்திப்பு, ஓர் அருள் நேர்வு!

அதுமுதல், அம்மையார், ஆழ்ந்த மெய்யன்புடன் தெளிந்த விளக்க உணர்வுடன் குருகுலப் பெரும் பணிகளில் தாவி விரைந்து முன்னேறி வருகிறார்கள். குருகுலத்தார் பிறர்க்கும் மேன்மேலும் ஊக்கம் விளைத்து, ஆக்கம் உறுத்தி வருகிறார்கள்.

அம்மையார்பண்புகளுக்கும்பக்குவத்துக்கும் குருகுலப் பணிகள் ஏற்றனவாய் உயிர்ப்புள்ளனவாய், பெரும்பயன் விளைப்பனவாய் உள்ளன. உருவான நற்பணிகளில் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் வியக்கத்தக்கது!

இத்தகைய அருமைப்பெருமாட்டியாரின் வாழ்க்கை வரலாறும், அருள்நேயப் பெருக்கில்நற்பணிகளில் கடமைகளில்வரவர அம்மையார் முன்னேறிவரும் மாண்பும், பிறவும் அறிய யார்க்கும் விருப்பம் உண்டாகும். அதனை இனிக் காண்போம்.

ஒவ்வோர் ஆண்டின் தல யாத்திரையிலும் இப்படியே அணுக்க அன்பராகச்சிற்சிலர் தொடர்பு கொள்கின்றனர்; திருவருட்செயல்! பின்பு விளக்கமாக இவை பற்றிய குறிப்புகள் வரும்.

## அருட்பெருஞ் சோதி அகவல் பேருரை

உரையாசிரியர்: இளவழகனார்.

**அகவல் மாட்சி:**

வள்ளலார் திருவருட்பாவில், தலைமணி போல விளங்குவது அருட்பெருஞ்சோதி அகவல். அது ''ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ்சோதி''யின் அருமை பெருமைகளையும், எளிமை இனிமைகளையும் விஞ்ஞான வழியிலும் மெய்ஞ்ஞான நிலையிலும் பலபடியாக விரித்து விரித்து விளக்குகின்றது.

**பேருரை முயற்சி:**

அருட்பெருஞ் சோதி அகவலை முறையாகப் பலர் குருவாரந்தோறும் திருவடிப் புகழ்ச்சியுடன் பாராயணமாக ஓதிவருகிறார்கள்; அது மேலுமேலும் சிறக்கும் பொருட்டு அகவலுக்கு விளக்கவுரை வெளியிடும் முயற்சியும் திருவருளால் இப்போது மாம்பாக்கம் குருகுலத்தில் (மதுராந்தகம் அஞ்சல்) மேற்கொள்ளப்பெற்றிருக்கிறது!

**வெளியீட்டு வகை:**

அகவல் விளக்கங்கள் பகுதி பகுதியாக மாதம் ஒன்றுக்குக் கிரவுன் 32-பக்கங்கள் அளவில் வெளிவருகின்றன. ஓர் ஆண்டுக்கு இப்படி 12 பகுதிகள் கிடைக்கும்.

முதல் பகுதி, வள்ளலார் பிறந்த நாள் புரட்டாசி 30 (16–10–55)–ல் வடலூரில் வெளியிடப்பெற்றது.

ஆர்வமுடையோர் தம் பெயரை, உரிய முகவரியுடன், சேர்க்கைக் கட்டணம் ரூபா 2; ஆண்டுக் கையொப்பம் ரூபா 3; ஆக ரூபா 5–(ரூபா ஐந்து மட்டும்) செலுத்தி, குருகுலத்திற் பதிவு செய்துகொள்வார்களாக! இவ்வாறு பெயர்ப் பதிவு செய்துகொள்ளாதவர்க்கு இவை கிடைக்க மாட்டா. ஒரு பகுதி பெறுவோர் எல்லாப் பகுதிகளும் பெறுதற்குரியர்; ஆதலின் சேர்க்கைக் கட்டணம் உண்டு; அது, அஞ்சற் செலவுக்குக் கணக்கீடு செய்யப்படும்.

பெயர்ப் பதிவுக்கு:

| சென்னையில்: | மாம்பாக்கத்தில்: |
|---|---|
| திரு. ஆறுமுகம் அவர்கள், | குருகுலம், மாம்பாக்கம் |
| 31. முல்லா சாயபு தெரு, | மதுராந்தகம் (அஞ்.) |

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)